# பாடநெறி வழிகாட்டி 2026




கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

# கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி
# 2026

இலங்கையிலும், அதற்கு அப்பாலும் திருச்சபை மற்றும் சந்தைவெளி எனப்படுகிற மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களிலும் விசுவாசிகளை திருச்சபைகளில் கிறிஸ்துவிற்கொப்பான தலைவர்களாக தயார்படுத்துவதற்காக இறையியல் கல்வியை வழங்குவதற்கு கொழும்பு இறையியல் கல்லூரியானது தன்னை அர்ப்பணித்துள்ளது.

கொழும்பு இறையியல் கல்லூரி என்பது, பல்தரப்பட்ட கிறிஸ்தவ பிரிவுகளை சேர்ந்த விசுவாசிகளின் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தவும், அவர்களது செழுமையான கிறிஸ்தவ மரபுகளை உணர்ந்து அறிந்துகொள்ளும் வாய்ப்பினையும் ஏற்படுத்தி தருகிற இறையியல் கல்லூரியாகும்.

கிறிஸ்தவ ஒற்றுமைக்கான கொழும்பு இறையியல் கல்லூரியின் அர்ப்பணிப்பானது பரிசுத்த வேதாகம அதிகாரத்தில் உறுதியாக வேரூன்றியுள்ளது: அது வேதாகமமே எமது விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்குமான இறுதியான வழிகாட்டி என்பதாகும்.

கொழும்பு இறையியல் கல்லூரியின் துடிப்பான கற்போர் சமூகத்துடன் இணைந்து கொண்டு விறுவிறுப்பான கற்றலின் பயணத்திலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் சுவிசேஷப்பணிக்கான பயன் தரக்கூடிய திறன்களை வளர்த்துக்கொள்வதிலும் பங்கெடுத்துக்கொள்ளுங்கள்.


**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தில்**
**இணைக்கப்பட்ட கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்பரிமையும்,**
**ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரமும் கொண்டது.**

# தொடர்பு கொள்வதற்கான தகவல்

| | |
|---|---|
| **பாடநெறி பதிவுகள்** | registrar@cts.lk |
| **வடகொழும்பு கல்வி நிலையம்** | nc@cts.lk |
| **கல்வித்திட்டங்கள்** | student.services@cts.lk |
| **மாணவர் கணக்கியல்** | student.accounts@cts.lk |
| **மாணவர் புலமைப்பரிசில்கள்** | scholarships@cts.lk |
| **நூலகம்** | library@cts.lk |
| **தகவல் தொழில்நுட்பம்** | it@cts.lk |
| **பிரயோக ஊழியப்பயிற்சி** | practicums@cts.lk |
| **ஆற்றுப்படுத்துகை பாடத்திட்டம்** | counselling@cts.lk |
| **முதுகலை பாடத்திட்டம்** | ma@cts.lk |
| **சிறுவர் ஊழிய களம்** | cm@cts.lk |
| **உதவி கல்விப்பீடாதிபதி**<br>திரு. ஜூலியன் தேவதாசன் | julian@cts.lk |
| **கல்விப்பீடாதிபதி**<br>போதகர். ரவின் கல்தேரா | ravin@cts.lk |

**+94 11 2890809 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **பொதுவான தகவல்கள்** | **4** |
| **தவணை 1: தை - சித்திரை (January - April)** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **6** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **7** |
| வாரநாள் வகுப்புக்கள் | **8–10** |
| மாலைநேர வகுப்புக்கள் | **11** |
| இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி | **12** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **12–14** |
| **தவணை 2: வைகாசி - ஆவணி (May - August)** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **16** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **17** |
| வாரநாள் வகுப்புக்கள் | **18–20** |
| மாலைநேர வகுப்புக்கள் | **21** |
| இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி | **22** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **22–24** |
| **தவணை 3: ஆவணி - கார்த்திகை (August - November)** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **26** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **27** |
| வாரநாள் வகுப்புக்கள் | **28–30** |
| மாலைநேர வகுப்புக்கள் | **31** |
| இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறிகள் | **32** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **33–34** |
| **விரிவுரையாளர்களின் விபரங்கள்** | **35–40** |
| **CTS பாடத்திட்டங்கள்** | **41** |
| **சிறுவர் ஊழிய களம்** | **42–43** |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறியானது, வாரத்திற்கு ஒரு தடவையாக 13 வாரங்களில் நடாத்தப்படும்.
- குறுங்கால பாடநெறியானது, நான்கு முழுநாட்கள் அடங்கிய அதிக எதிர்பார்ப்புள்ள பாடத்திட்டமாகும்.
- சகல பாடநெறிகளும் 30 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களை கொண்டதாக அமைந்துள்ளதுடன்; சில பாடநெறிகள் 45 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களை கொண்ட பாடநெறிகளாக அல்லது 30 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களுடன் 15 மணித்தியாலங்களை கொண்ட பிரயோகப்பயிற்சியையும் உள்ளடக்கிய பாடநெறிகளாகவும் காணப்படும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

- **நேர்நிலை கற்றல்:** கொஹுவலை மற்றும் வடகொழும்பு CTS வளாகத்தில் நடைபெறும் பாடங்கள்.
- **நிகழ்நிலை கற்றல்:** Zoom வழியாக நடைபெறும் பாடங்கள். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **கலப்பு கற்றல் நிலை:** மேற்குறிப்பிட்ட பௌதீகநிலை, இயங்கலை ஆகிய இரு முறைகளையும் உள்ளடக்கி பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும். சில வாரங்கள் உங்கள் வகுப்புக்கள் கொஹுவலை CTS வளாகத்திலும், ஏனைய வாரங்கள் இயங்கலை வழியாகவும் நடத்தப்படும். பாடநெறியின் ஆரம்பத்திலேயே உங்கள் விரிவுரையாளர் இது குறித்த அட்டவணையை உங்களுக்கு அறிய தருவார்.

**CTS பாடநெறி கட்டணங்கள்:**

ஒரு பாடத்திற்கான அறிமுக கட்டணமானது ரூ 7,500/= ஆகும்.

* இறையியல் கல்லூரியானது மிகவும் மானிய விலையில் பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு, அதன் ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**CTS பாடநெறிகளுக்கு பதிவு செய்வது எப்படி?**

registration.cts.lk எனும் வலைதளம் வழியாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப்படிவத்தை அனுப்பவும். உரிய பதிவுக்கட்டணங்களை எமது வலைதளத்தில் உள்ள https://www.cts.lk/payment/ என்ற கட்டணம் செலுத்தும் வலைவாசலினூடாக, நிகழ்நிலை வங்கி பணப்பரிமாற்றம், பணப்பற்று அல்லது கடன் அட்டையினூடாக செலுத்தலாம்.

***தயவு செய்து அவதானிக்கவும்:*** *உங்களது பாடத்திற்கான கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே வகுப்பிற்கான உங்களது ஆசனம் ஒதுக்கப்படும்.*

**முக்கிய கவனத்திற்கு:** CTS பாடநெறியொன்றிற்கு முதல் தடவையாக பதிவு செய்பவர்கள் தமது திருச்சபை போதகரின் பரிந்துரை கடிதத்துடனேயே பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

**பதிவு செய்யும் நாட்களும் நேரங்களும்:**

குறிப்பிட்ட தவணைக்கான பதிவு செய்யும் இறுதிநாள் அத்தவணையின் ஆரம்ப தினமாகும்.

***தவணை 1: 5-ம் திகதி தை (January) 2026***
***தவணை 2: 4-ம் திகதி வைகாசி (May) 2026***
***தவணை 3: 31-ம் திகதி ஆவணி (August) 2026***

# தவணை 1

# 5 தை – 4 சித்திரை 2026

○ நேர்நிலை கற்றல் | □ நிகழ்நிலை கற்றல் | ★ கலப்பு கற்றல் நிலை

# நேர அட்டவணை: தவணை 1 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **மனவதிர்ச்சி மற்றும் துஷ்பிரயோகத்திற்கான ஆற்றுப்பணி**<br>மு.ப.9:00-11:45<br>நிவேதிதா ஜீவபாலன் | **வியாக்கியானவியல்** ○<br>மு.ப.9:00-11:20<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | **இறையியலுக்கான** ○ **அறிமுகம்**<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>ஜுலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை மு.ப.10:30-11:30 | ○ **வேதாகமத்தை கற்கும் முறைகள்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br>ஆராதனை வேளை மு.ப.10:30-11:30 | ○ **புதிய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>மு.ப.9:00-11:30<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா |
| பிற்பகல் | | ○ **தலைமைத்துவ வாழ்க்கை முறை: 1, 2 தீமோத்தேயு**<br>பி.ப.3:00-5:20<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | ○ **ஆசிய கிறிஸ்தவ வரலாறு**<br>பி.ப.3:00-5:45<br>எஸ். கதிரேசப்பிள்ளை | ○ **மத்தேயுவின் நற்செய்தி நூல்**<br>பி.ப.3:00-5:30<br>சர்மிளா சுதாகர் | ★ **கலாச்சார மானுடவியல்**<br>பி.ப.3:00-5:30<br>கே. யாபேஸ் |
| மாலை | | **திருத்தூதுப்பணிக்கான** ○ **அறிமுகம்**<br>பி.ப.6:00-8:20<br>ஜுலியன் தேவதாசன் | □ **வேதாகம விளக்கவியல்**<br>பி.ப.5:30-9:30<br>குமார் சுப்ரமணியம் | ★ **ஆரோக்கியமான அணிகளை கட்டியெழுப்புதல்**<br>பி.ப.6:00-8:30<br>இரா. ஹரிஹரன் | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## நேர அட்டவணை: தவணை 1 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| **காலை** | | **உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்**<br>மு.ப.9:00-11:20<br>இரா. ஹரிஹரன் | **கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்**<br>மு.ப.9:00-11:45<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | **வேதாகம சமாதானப்பணி**<br>மு.ப.9:00-11:30<br>எஸ். கதிரேசப்பிள்ளை | |
| **மாலை** | | **ஏனைய மதத்தினருடன் தொடர்பு கொள்ளுதல்**<br>பி.ப.5:40-8:00<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **இலங்கை திருச்சபை வரலாறு**<br>பி.ப.5:15-8:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | | |
| | | **அப்போஸ்தல நடபடிகைகளில் சுவிசேஷப்பணி**<br>பி.ப.5:40-8:00<br>குமார் ஆபிரகாம் | **சினேகபூர்வமான சுவிசேஷப்பணி**<br>பி.ப.5:15-8:00<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் \| ஜெயசீலன் ஜோயல் டிரோன | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### மனவதிர்ச்சி மற்றும் துஷ்பிரயோகத்திற்கான ஆற்றுப்பணி

**BTh|Dip விருப்பு**
**COUN கட்டாயம்**

இப்பாடநெறியானது மத எல்லைகளுக்கு உள்ளும், புறமும் தொடர்புறும் வன்முறைகளை புரிந்து கொள்ளவும், தடுக்கவும் உதவுவதுடன், பாதிப்புற்றவர்கள், குற்றவாளிகளுக்கு அவசியமான ஆற்றுப்பணியை அளிப்பதில் முக்கிய அவதானத்தை செலுத்தும். குடும்ப வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து மீண்டவர்களுக்கும், ஏனைய வித மனவதிர்ச்சி சம்பவங்களுக்குமான உள ஆற்றுப்பணி பற்றி மாணவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11.45

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிவேதிதா ஜீவபாலன்**

### வியாக்கியானவியல்

**விளக்கவுரை வரலாறும் விமர்சன முறைகளும்**

**BTh|Dip விருப்பு**

இப்பாடநெறியானது இறையியலின் தெளிவான மேம்பாட்டிற்கு வேதாகமமானது எவ்வாறு விளக்கப்பட்டது என்பதை ஆராய்வதுடன் வேதாகம விளக்கவுரைக்கான பல்வேறுபட்ட வியாக்கியான அணுகுமுறைகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. நீங்கள் உங்களுடைய ஊகிப்புக்களை ஆராய்ந்து பார்க்கவும், வேதாகமத்தை வாசிக்கும்போதும் விளக்கும்போதும் பயன்படுத்தக்கூடிய சிறந்த உபாய வழிமுறைகளை உருவாக்கவும் இப்பாடநெறியானது உதவியாக அமையும்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11.20

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### தலைமைத்துவ வாழ்க்கைமுறை

**1, 2 தீமோத்தேயு**

**BTh|Dip விருப்பு**

பவுல் வாலிபனான தீமோத்தேயுவிற்கு உபதேசிக்கும் இப்புத்தகத்தின் வார்த்தைகளை மிகவும் அவதானமாக கற்க வேண்டியதொன்றாகும். இன்றைய உலகிலுள்ள பாரிய சவால்களின் மத்தியில் வாலிபர்கள் தலைமைப்பொறுப்பினை ஏற்பதற்கும், இன்றைய நடைமுறை பிரச்சனைகளின் மத்தியில் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக அவர்களை வழிநடத்துவதற்குமான ஆழமான கற்கையை இப்பாடநெறியானது வழங்குகிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5.20

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

தவணை 1 | 5 தை – 4 சித்திரை 2026

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

## இறையியலுக்கான அறிமுகம்

### கிறிஸ்தவ அடிப்படை விசுவாச கோட்பாடுகள்

BTh|Dip கட்டாயம்

எங்கள் விசுவாசமே எங்கள் வாழ்க்கையை தீர்மானிக்கும்! நாம் எதனை விசுவாசிக்கிறோம் என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருந்தாலும், அநேகர் அதனை தெளிவாக அறியாதிருக்கின்றார்கள். நீங்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளை மற்றொருவருக்கு விளக்க ஆரம்பித்து இறுதியில் தடுமாறும் நிலைக்கு ஆளாகியிருக்கிறீர்களா? இப்பாடநெறியானது கிறிஸ்தவ கோட்பாடுகளை குறித்து தெளிவான விளக்கத்தை தருவதோடு மற்றவர்களுக்கு அதனை நம்பிக்கையுடன் விளக்கவும் உதவி செய்யும்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12.45

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

## ஆசிய கிறிஸ்தவ வரலாறு

BTh|Dip விருப்பு

கடவுளை பற்றிய எமது செய்தி மற்றும் ஊழிய வழிமுறைகள் நம்பத்தகுந்ததாகவும், பொருத்தமானதாகவும் இருப்பது மிக முக்கியமானது. உலகிலுள்ள நாடுகளில் ஆசிய பகுதியில் உள்ள நமது நாட்டில் கடவுளின் கிரியை பற்றி அறிவதற்கான தனித்துவமான வாய்ப்பு இப்பாடநெறியில் அமைகிறது. அரிதாக கற்பிக்கப்படும் இப்பாடநெறியை கற்று பயன்பெறுங்கள்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5.45

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**எஸ். கதிரேசப்பிள்ளை**

## வேதாகமத்தை கற்கும் முறைகள்

BTh|Dip கட்டாயம்

வேதாகமத்தை நீங்களாகவே கற்றறிவதற்கான ஆற்றலை உங்களுக்கு தருவதுடன் சரியான கேள்விகளை கேட்பதற்கும், கற்றுக்கொண்டவற்றை சரியான முறையில் பிரயோகிப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட பாடமாகும். நீங்கள் ஆறு விதமான வேதாகம கற்கை முறைகளை கற்றறிந்து கொள்வதுடன் வேதாகம படிப்பிற்கு அத்தியாவசியமான ஆர்வத்தினை தூண்டும் கருவிகளிற்கு அறிமுகப்படுத்தப்படுவீர்கள்.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12.30

ஆரம்பம்: தை 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

# தவணை 1 | 5 தை – 4 சித்திரை 2026

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்

கிரேக்க வேதாகமத்தில் இப்புத்தகத்தின் இலக்கிய நடை அற்புதமானது. நான்கு நற்செய்தி புத்தகங்களும் தனித்துவமான செய்திகளை கொண்டிருக்கின்றன. இப்பாடநெறியானது மத்தேயு புத்தகத்தின் முக்கிய அம்சங்களை நோக்குவதாடு அதன் மையக்கருப்பொருளான கடவுளினுடைய இராஜ்யம், மலைப்பிரசங்கம், மற்றும் இயேசுவின் போதனை, தனித்துவமிக்க உவமைகள், புத்தக அமைப்பு, அதன் அருட்பணிக்கான செய்தி என்பவற்றை கண்ணோக்கும்.

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5.30

ஆரம்பம்: தை 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிளா சுதாகர்**

### புதிய ஏற்பாட்டிற்கான பின்னணி

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிற்கும் இடையிலான பரந்த காலகட்டமானது பல சுவாரஷ்யமான சம்பவங்களையும், விசேடமான நபர்களையும் கொண்டிருக்கிறது. கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் உலகத்தினை உருவாக்கிய தனித்துவமான சம்பவங்கள், ஏற்பாடுகளுக்கிடையிலான யூத மதத்தின் தன்மை மற்றும் அதன் முக்கிய இயக்கங்கள், குறிப்பிடத்தக்க இலக்கியம், கலாச்சாரம் மற்றும் பாலஸ்தீன, உரோம சாம்ராஜ்யத்தின் கலாச்சாரம் போன்றவை இப்பாடநெறியில் ஆராய்ந்து அறியப்படும்.

**BTh | Dip கட்டாயம்**

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11.30

ஆரம்பம்: தை 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**மகேஸ்வரன் மாணிக்கராஜா**

## கலப்பு கற்றல் நிலை

### கலாச்சார மானுடவியல்

சகல மக்களும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவரல்லாதவர்களாக இருந்தாலும், தங்கள் கலாச்சாரத்தின் கடலில் நீந்துகிறார்கள். இந்த பாடநெறியானது கலாச்சாரத்தின் கருத்தையும் அதன் முக்கிய துணை அமைப்புகளையும் ஆராய்வதோடு, திருச்சபை, நற்செய்திப்பணி மற்றும் கிறிஸ்தவ ஊழியம் ஆகியவற்றோடு எவ்வாறு தொடர்புறுகிறது என்பதை புரிந்து கொள்ள உதவுகிறது.

**BTh | Dip விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.3:00-5.30

ஆரம்பம்: தை 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

## தவணை 1 | 5 தை – 4 சித்திரை 2026

# மாலைநேர வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

BTh|Dip கட்டாயம்

### திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்

"திருத்தூதுப்பணி" எனும் வார்த்தையை அனைத்து கிறிஸ்தவர்களும் அறிந்திருந்தாலும், அதை குறித்த சரியான தெளிவின்மை இன்றும் காணப்படுகிறது. இப்பாடநெறியானது திருத்தூதுப்பணி என்றால் என்ன என்பதை வரலாற்று ரீதியாக பல கோணங்களில் ஆராய்ந்து, ஏற்படும் சவால்கள் மத்தியில் கடவுளின் திருத்தூதுப் பணியினை முன்னெடுப்பதற்கு நீங்களும், உங்கள் திருச்சபையும் தனித்துமான பங்களிப்பினை வழங்குவதற்கு தயார்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8.20

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜுலியன் தேவதாசன்**

## கலப்பு கற்றல் நிலை

BTh|Dip விருப்பு

### ஆரோக்கியமான அணிகளை கட்டியெழுப்புதல்

தனியாக இயங்குவதை பார்க்கிலும் அணியாக இணைந்து செயலாற்றுவது என்பது சுவாரஸ்யமானது, அழகானது, வல்லமையானது, அதிக பிரதிபலன்களையும் உறுதியான வெற்றிகளையும் பெற்றுத்தரக்கூடியதுமாகும். வேதாகமும் சவால்கள் நிறைந்த உலகில் சபையினரை கூட்டாக இணைந்து செயலாற்ற அழைக்கின்றது. எனவே சவால்களை எவ்வாறு முறியடித்து வெற்றி பெறுவது? இதிலுள்ள அனுகூலங்களும் பிரதிகூலங்களும் யாவை? வினைத்திறனுள்ள குழுவில் காணப்பட வேண்டிய தன்மைகள் எவை? போன்ற கேள்விகளுக்கு இப்பாடநெறியானது விடை காண முயற்சிக்கிறது.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8.30

ஆரம்பம்: தை 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

## தவணை 1 | 5 தை – 4 சித்திரை 2026

# இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி

## நிகழ்நிலை கற்றல்

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுமாணி பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இறையியல் இளங்கலை பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

### வேதாகம விளக்கவியல்

**BTh கட்டாயம்**

இக்கருத்தரங்கில் பங்குபற்றுபவர் வேதாகம விமர்சனத்திற்கான வித்தியாசமான அணுகுமுறைகளை குறித்து விழிப்புணர்வை பெறுவதுடன் வேதாகமத்தின் வேறுபட்ட இலக்கிய தன்மைகளை புரிந்து கொள்ளவும் கூடிய வாய்ப்பையும் பெறுவார். அதன் மூலம் வேதாகம வியாக்கியானத்திற்கான புலமை வாய்ந்த அணுகுமுறைகளை கொண்டு வேதாகமத்தின் புதையல்களை கண்டறிவதற்கு கற்றுக்கொள்வர்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:30-9.30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**குமார் சுப்ரமணியம்**

## தவணை 1 | 5 தை – 4 சித்திரை 2026

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்

**BTh | Dip விருப்பு**

ஏற்கனவே நமக்குள் ஒரு தலைமைத்துவம் ஒளிந்திருக்கிறது. அதனை நம்மில் அநேகர் அறியாமல் இருக்கிறோம். சிலர் தலைவர்களாக பிறந்திருக்கிறார்கள், சிலர் தலைவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள், சிலர் தலைமைத்துவத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள். இதில் நீங்கள் எந்த சாரராயிருப்பினும் உங்களை தலைவராக எண்ணினால் உங்களுக்கு தேவையான முக்கிய பாடம் இதுவாகும். இது தலைமைத்துவம் என்றால் என்ன?, அதன் திறவுகோல், உள்ளடக்கம், சவால், உயர்வு, முரண்பாடுகளை கையாளுதல், பண்புகள், தரிசனம், தொலைநோக்கு, ஒழுக்கம், மேம்பாடு என்பவற்றை ஆராய்ந்து உங்களுக்குள் புதைந்திருக்கும் தலைமைத்துவத்திற்கு புத்துயிரளிக்கும்!

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11.20

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்

BTh|Dip விருப்பு

இந்நிருபத்தினை புரிந்து கொள்வதில் கிறிஸ்தவர்களும், திருச்சபைகளும் பெரும் சவால்களை இன்றைய காலத்திலும் எதிர்நோக்குகின்றனர். கொரிந்து திருச்சபையில் காணப்பட்ட திருச்சபை பிளவு, ஒழுக்க, கலாச்சார ரீதியான பிரச்சினைகள், விவாகரத்து, ஆவிக்குரிய கொடைகள் போன்ற பல பிரச்சனைகளுக்கான தீர்வின் படிப்பினைகளை இன்றைய சமகால திருச்சபைகளுக்கு முன்வைக்கிறதாக இப்பாடநெறியானது அமைகிறது.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11.45

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

### வேதாகம சமாதானப்பணி

BTh|Dip விருப்பு

மனிதர்களிடையே முரண்பாடுகள் நாளாந்தம் ஏற்படுகின்றதொரு விடயமாகும். அதேவேளையில் தேசிய, உலகளாவிய முரண்பாடுகள் கிறிஸ்தவர்களின் அவதானத்தை கோருகின்றது. இப்பின்னணியில் கிறிஸ்து எம்மை சமாதானமாக்குகிறவர்களாக செயற்பட தயாராக இருக்கும்படி கூறுகின்றார். வேதாகம சமாதானமாக்குதல் பிரச்சினைகளின் மூலங்களை ஆராய்ந்தறிந்து அதற்கு எவ்வாறான பிரதியுத்தரம் கொடுக்கப்பட வேண்டும், பிரச்சனைகளை தீர்க்க எடுக்கப்படும் வழிமுறைகள் என்பவற்றை ஆராய்வதுடன் மன்னிப்பளிப்பதில் இருக்கும் சவால்களிற்கும் முகம் கொடுக்க உதவும்.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-11.30

ஆரம்பம்: தை 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**எஸ். கதிரேசப்பிள்ளை**

### ஏனைய மதத்தினருடன் தொடர்புகொள்ளுதல்

BTh|Dip விருப்பு

ஏனைய மதங்களையும், அவைகளின் தனித்துவமான கலாசார பின்னனியையும் விளங்கிக் கொள்ள முற்படுவோமாயின், இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் நான்கு முக்கிய மதங்களிற்கு வாழ்விடமாக இருக்கும் சமூகத்தில் பலனளிக்கும் வகையில் வாழக்கூடியதாக இருக்கும். பௌத்தம், இந்து, இஸ்லாம் போன்ற மதங்களின் அடிப்படை போதனைகளை அறிந்து கொள்ளவும், அவர்களுடன் கௌரவத்துடன் உரையாடவும் இப்பாடநெறியினூடாக கற்றுக்கொள்ளுங்கள். ஒப்புரவாகிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு நீங்கள் எவ்வாறு பங்காற்றலாம் என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:40-8.00

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

## தவணை 1 | 5 தை – 4 சித்திரை 2026

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### அப்போஸ்தல நடபடிகைகளில் சுவிசேஷப்பணி

**BTh|Dip விருப்பு**
**EVAN விருப்பு**

கிறிஸ்துவின் ஆரம்ப கால சீஷர்கள் மேற்கொண்ட சுவிசேஷப்பணியில், பரிசுத்தாவியானவரின் மகத்தான வல்லமையை நாம் காண்கிறோம். மிகுந்த பாடுகளின் மத்தியில் அவர்கள் ஆண்டவரின் மரணத்தையும், உயிர்த்தெழுந்த செய்தியையும் பகிர்ந்ததன் மூலமாக, தனிப்பட்ட விதத்திலும், சிறிய மற்றும் பெரிதான மக்கள் சமூகத்தின் மத்தியிலும் பிரகாசிக்கிற சாட்சிகளாக திகழ்ந்தனர். முதன்முதலாக ஆரம்ப கால திருச்சபைகளை ஸ்தாபித்தவர்களும் இவர்களேயாவர். வேதாகம வசனங்களின் மூலமாக சுவிசேஷப்பணிக்கான தங்கள் வைராக்கியத்தினை கொழுந்து விட்டெரிய செய்ய விரும்புகிறவர்களுக்கு இது ஒரு முக்கியமான பாடநெறியாகும்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:40-8.00

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **குமார் ஆபிரகாம்**

### இலங்கை திருச்சபை வரலாறு

**BTh|Dip கட்டாயம்**

இலங்கையில் கிறிஸ்தவ மரபுரிமையின் மதிப்பை உணர்ந்து கொள்ள அபூர்வமானதொரு தருணம். இப்பாடநெறிக்கூடாக இலங்கையில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், அமெரிக்க திருத்தூதுப்பணியாளர்கள் போன்றோருடைய செயற்பாடுகளை அவதானிப்பதன் ஊடாக தற்போது இலங்கையிலுள்ள சபையின் பல விதமான அமைப்புகள் எவ்வாறு உருவானது என்பதை குறித்தும் அறியக்கூடியதாக இருக்கும்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:15-8.00

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### சினேகபூர்வமான சுவிசேஷப்பணி

**BTh|Dip கட்டாயம்**
**EVAN கட்டாயம்**

இப்பாடநெறியில் இக்கால சமூகத்தில் நட்பிற்கான இடத்தை குறித்து கலந்துரையாடுவதோடு நட்பிற்கூடாக நற்செய்தியை பயனுள்ள முறைகளில் பகிர்ந்து கடவுளின் மாபெரும் கட்டளையை நிறைவேற்ற திருச்சபைக்கு எவ்வாறு உதவலாம் என்பதை குறித்து நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:15-8.00

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **மோகன் இதயகுமார் அழகக்கோன்| ஜெயசீலன் ஜோயல் டிரோன்**

# தவணை 2

# 4 வைகாசி – 1 ஆவணி 2026

○ நேர்நிலை கற்றல் | ◘ நிகழ்நிலை கற்றல் | ★ கலப்பு கற்றல் நிலை

# நேர அட்டவணை: தவணை 2 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **சிறுவர்நல ஆற்றுப்பணி**<br>மு.ப.9:00-11:45<br>நிவேதிதா ஜீவபாலன் | ○ **திருச்சபை வரலாறு I**<br>மு.ப.9:00-11:20<br>செல்லதுரை<br>ஜோ. சந்ரசேகர் | ○ **பிரசங்க பயிற்சி**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>குமார் சுப்ரமணியம்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>ஜூலியன் தேவதாசன்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **கற்கை முறைகள்**<br>மு.ப.9:00-11:20<br>செல்லதுரை<br>ஜோ. சந்ரசேகர் |
| பிற்பகல் | | ○ **ஆதியாகமம்**<br>பி.ப.3:00-5:20<br>சர்மிளா சுதாகர் | ◘ **தேவனும் சமூகமும்**<br>பி.ப.3:00-5:30<br>கிறிஸ்டி சாமுவேல் | ○ **புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>பி.ப.3:00-5:20<br>வனஜா ராஜ்குமார் | |
| மாலை | | ◘ **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்**<br>பி.ப.6:00-8:20<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | ○ **தேவனும் உலகமும்**<br>பி.ப.6:00-8:30<br>கிறிஸ்துமணி<br>செல்லையா | ◘ **கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு**<br>பி.ப.6:00-8:20<br>வி. கிறிஷாந்தி<br>சந்ரசேகர் | ◘ **திருப்பணிக்கான அறநெறி**<br>பி.ப.6:00-9:30<br>இரா. ஹரிஹரன் |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 2 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **கிறிஸ்தவ கோட்பாடுகளின் வரலாறு**<br>மு.ப.9:00-11:20<br>ஜூலியன் தேவதாசன் | **பவுலின் வாழ்க்கை**<br>மு.ப.9:00-11:30<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா | | |
| மாலை | | **வறுமை மற்றும் சூழல் பற்றிய அறநெறி**<br>பி.ப.5:40-8:00<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் | | | |
| | | **வாலிபர் சுவிசேஷப்பணி**<br>பி.ப.5:40-8:00<br>மோகன் இதயகுமார் அழகக்கோன | **வேதாகமத்தை கற்கும் முறைகள்**<br>பி.ப.5:30-8:00<br>வனஜா ராஜ்குமார் | | |



முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## துவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### சிறுவர்நல ஆற்றுப்பணி

BTh|Dip விருப்பு
COUN கட்டாயம்

சிறுவர்களை எதிர்கால சபையின் அங்கத்தினர்களாக எண்ண வேண்டாம். அவர்கள் இன்றைய திருச்சபையின் அங்கத்தினர்கள். சிறுவர்களின் நம்பிக்கையையும் நடைமுறை வாழ்வையும் உதாசீனம் செய்யும் ஒரு உலகில் சிறுவர்கள் தன்னம்பிக்கையுடன் இயேசுவை நம்பி பின்பற்ற வேண்டும். இப்பாடநெறியானது ஆசிரியர்கள் சவாலுடன் இந்த தேவையை நிறைவேற்ற அவர்களை ஆயத்தப்படுத்தி, எதிர்கால சந்ததி வேதாகமத்தை ஆவலுடன் கற்று, வாழ்வில் மாற்றத்துடன் இயேசுவை பின்பற்ற உதவி செய்யும்.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:45

ஆரம்பம்: வைகாசி 11

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிவேதிதா ஜீவபாலன்**

### திருச்சபை வரலாறு I
**(கி.பி. 100 - கி.பி. 1517)**

BTh|Dip கட்டாயம்

திருச்சபையின் ஆரம்பம் முதல் சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இப்பாடநெறியானது கி.பி.1 முதல் கி.பி.1400 வருடங்களில் திருச்சபையானது விரிவடைந்த விதங்கள், அதை வடிவமைத்த இறையியல்கள், திருச்சபை பிதாக்கள், இரத்தசாட்சிகள், துறவிகள், அருட்பணியாளர்கள், கிறிஸ்தவ இயக்கங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: வைகாசி 5

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### ஆதியாகமம்

BTh கட்டாயம்
Dip விருப்பு

ஆரம்பங்களின் புத்தகத்தை குறித்து ஆழமாக ஆராயப்படும். இப்பாடநெறியானது உலகத்தின் ஆரம்பம், மனிதன், இஸ்ரவேல், பாவம், மீட்பு உள்ளிட்ட கருப்பொருள்களுடன் ஆதியாகமத்தின் சரித்திர, கலாச்சார பின்னணியில் அதன் விளக்கத்தையும், அதன் அமைப்பு, செய்தி ஆகியவற்றையும் ஆராயும்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: வைகாசி 5

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிளா சுதாகர்**

# தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026
# வாரநாள் வகுப்புகள்
## நேர்நிலை கற்றல்

### பிரசங்க பயிற்சி

**BTh|Dip விருப்பு**

கூட்டு ஆராதனையில் பிரசங்கம் பிரதான இடத்தை வகிக்கின்றது. வாழ்வை மாற்றக்கூடிய உற்சாகமான பிரசங்கங்களை நாம் எவ்வாறு மேற்கொள்ள முடியும்? பிரசங்கங்களை உருவாக்கும் உபாயங்களிலும் பிரசங்க கலையிலும் நீங்கள் பயிற்சி பெற இதுவொரு அரிய சந்தர்ப்பம். இந்த பாடநெறியானது தாக்கமுள்ள விதத்தில் கடவுளினுடைய வார்த்தையை தெளிவாக பகிர்ந்து கொள்ளும் ஒருவராக நீங்கள் மாற உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: வைகாசி 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**குமார் சுப்ரமணியம்**

### பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி

**BTh|Dip கட்டாயம்**

பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் உள்ள பெறுமதியான, அழகான பின்னணியை இப்பாடநெறிக்கூடாக விளங்கிக்கொள்வதோடு, பண்டைய கிழக்கிற்கு அருகாமையின் கலாச்சாரம், மதம், வரலாறு போன்றவற்றை ஆய்வு செய்து, பழைய ஏற்பாட்டினை, புதிய வடிவில் கற்றுக்கொள்வதற்கு உதவுகிறது.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:20

ஆரம்பம்: வைகாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

**BTh|Dip கட்டாயம்**

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை கற்றுக்கொள்வதோடு ஒவ்வொரு புத்தகத்தினதும் எழுத்தாளர், முக்கிய செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள், சரித்திர பின்னணி மற்றும் தனித்துவங்களை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள இப்பாடநெறியானது துணை புரியும்.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: வைகாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

# தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

**BTh|Dip கட்டாயம்**

### கற்கை முறைகள்

இப்பாடநெறியானது கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், ஒப்படை மற்றும் கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: வைகாசி 8

திறமை அளவு: (0) 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## நிகழ்நிலை கற்றல்

**BTh|Dip விருப்பு**

### தேவனும் சமூகமும்

இப்பாடநெறிக்கூடாக சமூகத்தின் நவீன போக்குகளை குறித்து வேதாகமம் போதிப்பது யாது? என்பதையும் தற்போதைய காலத்தில் முக்கிய போக்குகளாக காணப்படும் பன்மைவாதம், பன்முக கலாச்சாரவாதம், உலகமயமாக்கல், பெண்கள் விடுதலை போன்ற விடயங்களையும் வேதாகம கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். அன்றாட வாழ்வில் உலகத்தினருடன் தொடர்புறும் கிறிஸ்தவனுக்கு மிகவும் அத்தியாவசியமான பாடமாகும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: வைகாசி 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **கிறிஸ்டி சாமுவேல்**

# தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026
# மாலைநேர வகுப்புகள்
## நேர்நிலை கற்றல்

| | |
|---|---|
| **தேவனும் உலகமும்**<br><br>இப்பாடநெறியானது சமகால வாதங்கள், கிறிஸ்தவ சிந்தனையின் வரலாறு ஆகியவற்றை கிறிஸ்தவ அடிப்படையின் வெளிச்சத்தில் ஆராய்கிறதுடன் முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஆய்விற்கான அறிமுகமாகவும் காணப்படுகிறது. ஆண்டவருடைய குணாதிசயங்களும் அவருடைய தன்மைகளும், உலகம், மனிதனின் படைப்பு மற்றும் வீழ்ச்சி ஆகிய முக்கிய கருப்பொருள்களை வேதாகமத்தின் அடிப்படையில் புரிந்துகொள்ளும் ஓர் இறையியல் முயற்சியாகும். | **BTh\|Dip கட்டாயம்**<br><br>12 வாரங்கள்<br><br>நாள்: புதன்<br><br>நேரம்: பி.ப.6:00-8:30<br><br>ஆரம்பம்: வைகாசி 6<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்:<br>**கிறிஸ்துமணி செல்லையா** |

## நிகழ்நிலை கற்றல்

| | |
|---|---|
| **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்**<br><br>கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய தீர்மானங்களில் ஒன்று திருமணம். இப்பாடநெறி திருமணத்தை குறித்த வேதாகம கண்ணோட்டத்தை புரிந்துகொள்ள உதவும் அதேநேரம் திருமண உறவுக்குள் பாலியல், சிநேகம், வகிபங்கு, பொறுப்புகள் போன்ற விடயங்கள் ஆராயப்படுவதோடு, தம்பதிகள் முகம் கொடுக்கும் சவால்களான நிதி நிர்வாகம், பிள்ளைகளற்ற நிலை, துஷ்பிரயோகிக்கும் துணை, நம்பிக்கைத்துரோகம், விவாகரத்து போன்ற விடயங்களும் ஆராயப்படும். | **BTh\|Dip விருப்பு**<br>**COUN கட்டாயம்**<br><br>13 வாரங்கள்<br><br>நாள்: செவ்வாய்<br><br>நேரம்: பி.ப.6:00-8:20<br><br>ஆரம்பம்: வைகாசி 5<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்:<br>**கிறிஸ்ரி பாலேந்திரன்** |

| | |
|---|---|
| **கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு**<br><br>கிறிஸ்தவ குடும்பங்களிலுள்ள பெற்றோர் வேகமாக மாறும் இவ்வுலகத்திலே தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தை குறித்தும், ஆரோக்கியமான குடும்பத்தை கட்டியெழுப்புவதை குறித்தும் பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே இப்பாடநெறியானது வேதாகமத்தின் அடிப்படையில் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டுமென்பதை கற்றுக்கொடுக்கிறது. உங்களை சிறந்த பெற்றோராக மாற்றவும் ஏனைய பெற்றோர்களை வழிநடத்தவும் உதவி புரியும். | **BTh\|Dip விருப்பு**<br><br>13 வாரங்கள்<br><br>நாள்: வியாழன்<br><br>நேரம்: பி.ப.6:00-8:20<br><br>ஆரம்பம்: வைகாசி 7<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்:<br>**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்** |

## தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026

# இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி

### நிகழ்நிலை கற்றல்

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுமாணி பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இறையியல் இளங்கலை பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

**BTh கட்டாயம்**

## திருப்பணிக்கான அறநெறி

பணம், பாலியல், அதிகாரம் தொடர்பான பிரச்சனைகள் ஆண்டாண்டு காலமாக கிறிஸ்தவ சமுதாயங்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக காணப்பட்டது. இன்றும் அவை திருச்சபையை பலமாக தாக்குகின்றது. இப்பாடநெறியானது பணம், பாலியல், அதிகாரம் தொடர்பான ஆபத்துக்களை குறித்த விழிப்புணர்ச்சியை அதிகரிப்பதுடன், எவ்வாறு இக்கொடைகளை துஷ்பிரயோகம் செய்யாதபடி கிறிஸ்தவ ஊழியத்தை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய பொறிமுறைகளை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும், பேணவும் முடியும் என்பதை கற்றுக்கொள்ளவும் துணை புரியும்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-9:30

ஆரம்பம்: வைகாசி 8

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

## தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

### நேர்நிலை கற்றல்

**BTh|Dip விருப்பு**

## கிறிஸ்தவ கோட்பாடுகளின் வரலாறு

கிறிஸ்தவம் என்பது வாழ்க்கை முறையுடன் தொடர்புற்ற கோட்பாடெனப்படுவதுடன், இது வரலாற்று சம்பவங்களின் அடிப்படையிலான இறையியல் வினாக்களின் மூலமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து மூலம் கிடைக்கப்பெற்ற விடுதலையை பெறுவதற்கான முயற்சியானது வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டது. எனவே கிறிஸ்தவ வரலாறு முழுவதிலும் கிறிஸ்தவ சிந்தனை மற்றும் பக்தி வளர்ச்சியை நமது வாழ்க்கையின் நியாயப்பிரமாணங்களில் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடநெறியின் மூலமாக கிறிஸ்தவ வரலாற்றினூடாக கிறிஸ்தவத்தின் முக்கிய கோட்பாடுகளின் உருவாக்கம் பற்றி கற்றுக்கொள்வீர்கள்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: வைகாசி 5

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

# தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

## பவுலின் வாழ்க்கை

**BTh | Dip விருப்பு**

இயேசு கிறிஸ்துவுக்கு பின்பதாக புதிய ஏற்பாட்டு எழுத்துக்களில் ஆதிக்கம் செலுத்தும் பவுலின் வாழ்க்கையானது கிறிஸ்தவ தலைமைத்துவ பண்புகளுடனும், அர்ப்பணிப்புடனும் கிறிஸ்துவை பின்பற்றும் விசுவாச வாழ்க்கைக்கு ஓர் முன்னுதாரணமாகவும், கிறிஸ்துவை பின்பற்றுபவர்களுக்கு தைரியத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதை காணலாம். இவருடைய வாழ்க்கையை கற்று பின்பற்றுவதனூடாக, எமது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் மிக சிறந்த கிறிஸ்தவ பயணத்தை மேற்கொள்ள முடியும் என்பதை மாணவர்கள் அறிந்துகொள்வர்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: வைகாசி 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **மகேஸ்வரன் மாணிக்கராஜா**

## வறுமை மற்றும் சூழல் பற்றிய அறநெறி

**BTh | Dip விருப்பு**

அண்மைக்காலமாக ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்து கொண்டிருக்கின்றது. இதன் விளைவாக இலங்கையின் கிராமப்புறத்திலும் நகர்ப்புறத்திலும் ஏழை மக்களின் சனத்தொகை பெருகியிருக்கிறது. அநேக குற்றச்செயல்கள், வன்முறைகள் மற்றும் வியாதிகள் போன்ற சமூக சீரழிவுகளுக்கு பெரும்பாலும் வறுமையே ஊற்றாக உள்ளது. இப்பாடநெறியில் வறுமைக்கான மூலகாரணங்கள் ஆராயப்படுவதோடு, அதனை ஒழிப்பதற்கான கிறிஸ்தவ அணுகுமுறைகளும் அறிமுகப்படுத்தப்படும்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:40-8:00

ஆரம்பம்: வைகாசி 5

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிரஞ்ஜனி இராஜரட்ணம்**

## வாலிபர் சுவிசேஷப்பணி

**BTh | Dip விருப்பு**
**EVAN விருப்பு**

இப்பாடநெறியானது, வாலிப சமூதாயத்தினரின் தனித்துவமான கலாச்சார, சமூக மற்றும் ஆன்மீக பின்னணிகளை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு சுவிசேஷத்தினை திறம்பட அறிவிப்பதற்கு மாணவர்களை தயார்படுத்துகிறது. வேதாகம அடித்தளங்கள், நடைமுறை மூலோபாயங்கள் மற்றும் ஆக்கபூர்வமான வழிமுறைகளின் மூலம், இப்பாடநெறியில் பங்கேற்பவர்கள் வாலிபர்களுடன் தெளிவான, கரிசனையான மற்றும் பொருத்தமான விதத்தில் தொடர்புறுவதற்கும், சரியான விதத்திலான சீஷத்துவத்தினையும், திருத்தூதுப் பணியினையும் வளர்ப்பதற்கும் கற்றுக்கொள்வார்கள்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:40-8:00

ஆரம்பம்: வைகாசி 5

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **மோகன் இதயகுமார் அழகக்கோன்**

தவணை 2 | 4 வைகாசி – 1 ஆவணி 2026

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

| | |
|---|---|
| **வேதாகமத்தை கற்கும் முறைகள்**<br>வேதாகமத்தை நீங்களாகவே கற்றறிவதற்கான ஆற்றலை உங்களுக்கு தருவதுடன் சரியான கேள்விகளை கேட்பதற்கும், கற்றுக்கொண்டவற்றை சரியான முறையில் பிரயோகிப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும். நீங்கள் ஆறு விதமான வேதாகம கற்கை முறைகளை கற்றறிந்து கொள்வதுடன் வேதாகம படிப்பிற்கு அத்தியாவசியமான ஆர்வத்தினை தூண்டும் கருவிகளிற்கு அறிமுகப்படுத்தப்படுவீர்கள். | **BTh \| Dip கட்டாயம்**<br>12 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: பி.ப.5:30-8:00<br>ஆரம்பம்: வைகாசி 6<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**வனஜா ராஜ்குமார்** |

# தவணை 3
# 31 ஆவணி – 28 கார்த்திகை 2026

○ நேர்நிலை கற்றல் | □ நிகழ்நிலை கற்றல் | ✶ கலப்பு கற்றல் நிலை

# நேர அட்டவணை: தவணை 3 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **பொதுவான பிரச்சினைகளுக்கான ஆற்றுப்பணி**<br>மு.ப.9:00-11:30<br>நிவேதிதா ஜீவபாலன் | ○ **வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள**<br>மு.ப.9:00-11:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **திருச்சபை நிறுவுதல்**<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>இரா. ஹரிஹரன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>ஜுலியன் தேவதாசன்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **கிறிஸ்தவ வரலாறு II**<br>மு.ப.9:00-11:20<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் |
| பிற்பகல் | ✶ **ஏற்பாடுகளுக்கு இடையிலான இலக்கிய நூல்கள்**<br>பி.ப.3:00-5:20<br>யொஹான் கிருஷ்ணகுமார் | | ✶ **வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்**<br>பி.ப.3:00-5:20<br>ஞா. ஸ்டன்லி நெல்சன் | ✶ **சங்கீதங்களை ஆராய்தல்**<br>பி.ப.3:00-5:20<br>காமினி ஜயந்த | ✶ **எஸ்றா - நெகேமியா**<br>பி.ப.3:00-5:20<br>கே. யாபேஸ் |
| மாலை | ○ **கலாச்சாரம், இனம் மற்றும் கிறிஸ்தவ அடையாளம்**<br>பி.ப.6:00-8:20<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் | ○ **சீஷத்துவம்**<br>பி.ப.6:00-8:30<br>கிறிஸ்துமணி செல்லையா | □ **சமகால கருத்தியல்கள்**<br>பி.ப.6:00-9:30<br>ஜுலியன் தேவதாசன் | □ **1-2 சாமுவேல்**<br>பி.ப.6:00-8:20<br>வனஜா ராஜ்குமார் | □ **தலைமைத்துவ மாதிரிகள்**<br>பி.ப.6:00-9:30<br>கிறிஸ்துமணி செல்லையா |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 3 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:30<br>வனஜா ராஜ்குமார் | **யோவான் எழுதிய சுவிசேஷம்**<br>மு.ப.9:00-11:20<br>சர்மிளா சுதாகர் | **கற்கை முறைகள்**<br>மு.ப.9:00-11:20<br>வனஜா ராஜ்குமார் | |
| மாலை | | **பிரதான மதங்கள்**<br>பி.ப.5:30-8:00<br>ஜூலியன் தேவதாசன் | **திருத்தூதுப் பணியியல் தொடர்பான பிரச்சினைகள்**<br>பி.ப.5:40-8:00<br>கிறிஸ்டி சாமுவேல் | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவணை 3 | 31 ஆவணி – 28 கார்த்திகை 2026

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### பொதுவான பிரச்சினைகளுக்கான ஆற்றுப்பணி

**BTh|Dip விருப்பு**
**COUN கட்டாயம்**

சமுதாயமானது துயரம், மனச்சோர்வு, கவலை, தாழ்வு மனப்பான்மை, கோபம் மற்றும் துர்ப்பழக்கங்களுக்கு அடிமையாதல் போன்ற அளவுகடந்த பொதுவான பிரச்சினைகளால் நிறைந்திருக்கின்றது. இவை கிறிஸ்தவ குடும்பங்களுக்கும் பெரும் சவாலாகவுள்ளன. அப்படிப்பட்ட சவால்மிகு சூழ்நிலைக்கூடாக செல்பவர்களுக்கு உதவி செய்வதற்கான வழிமுறைகளையும் திறன்களையும் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கு இப்பாடநெறியானது உறுதுணையாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: புரட்டாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிவேதிதா ஜீவபாலன்**

### வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்

**BTh|Dip விருப்பு**

இப்பாடம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு மிகவும் அவசியமானது. ஏனென்றால் இன்று வேதாகமத்தை குறித்தும், அதன் நம்பகத்தன்மை குறித்தும் அதிகமான சந்தேகங்களும், சர்ச்சைகளும் தோன்றியுள்ளன. இதை குறித்து பலவிதமான கண்ணோட்டங்களும் உள்ளன. இவைகளை குறிப்பாக கற்றறிவதன் மூலம் நாம் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை குறித்து எமது விசுவாசத்தை இன்னும் பலப்படுத்தி கொள்வதோடு, வேதாகமத்தின் நம்பகத்தன்மையை மற்றவர்களுக்கு உறுதியுடன் எடுத்துக்காண்பிக்கவும் முடியும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: புரட்டாசி 1

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### திருச்சபை நிறுவுதல்

**BTh|Dip விருப்பு**

திருச்சபை நிறுவுதல் என்பது, ஒரு பிரதேசத்தில் புதிய திருச்சபைகளை உருவாக்குவதாகும். இப்பாடநெறியானது ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ள முறைகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறை கலாச்சாரத்தில் மதிப்பீடு செய்கிறது. வலுவுள்ள, ஆரோக்கியமான, சூழமைவுக்கு ஏற்ற விசுவாசிகளின் சமூகங்களை ஸ்தாபிக்கும் பொருட்டு, திருச்சபை நிறுவுதல் இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான நடைமுறை சார்ந்த வழிகளை கற்றுக்கொடுக்கிறது.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:20

ஆரம்பம்: புரட்டாசி 2

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **இரா. ஹரிஹரன்**

## தவணை 3 | 31 ஆவணி – 28 கார்த்திகை 2026

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

**BTh|Dip கட்டாயம்**

திருச்சபை வரலாறில் பல இறையியலாளர்கள் கிறிஸ்துவின் தெய்வீக, மனுஷீகம் தொடர்பான கேள்விகளுக்கான பதிலை பல நூற்றாண்டுகளாக விபரிக்க முயற்சித்துள்ளனர். கிறிஸ்துவை குறித்தும், அவரது பண்புகள், குணாதிசயங்கள், தேவனோடு அவருக்குள்ள தெய்வீக உறவு, பழைய, புதிய ஏற்பாட்டில் அவரது செயற்பாடுகள், இன்றைய திருச்சபைகளில், கிறிஸ்தவர்களது வாழ்வில் அவர் செயற்படுகிறார் போன்றவற்றிற்கான விளக்கங்களை இப்பாடநெறியில் ஆராயப்படும்.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:20

ஆரம்பம்: புரட்டாசி 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### கிறிஸ்தவ வரலாறு II
**(கி.பி. 1517 - கி.பி. 1900)**

**BTh|Dip கட்டாயம்**

சீர்திருத்தம் முதல் (1517) நவீன திருத்தூதுப்பணி இயக்கங்கள் (1900) வரையிலான காலகட்டத்தில் மேற்கத்தேய திருச்சபை வரலாற்றின் மாபெரும் சீர்திருத்தவாதிகள், மதிநுட்பமுள்ள இறையியலாளர்கள், பெருங்கூட்ட சுவிசேஷகர்கள், உலக தூதுப்பணி இயக்கங்கள் ஆகியவர்களால் திருச்சபையில் ஏற்பட்ட பரம்பல், தாக்கங்களை இப்பாடமானது ஆராய்வதோடு, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய பாடங்களை, ஆரோக்கியமான திருச்சபை வாழ்வை நோக்கி பிரயோகிப்பதற்கும் உதவி செய்யும்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: புரட்டாசி 4

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## கலப்பு கற்றல் நிலை

### ஏற்பாடுகளுக்கு இடையிலான இலக்கிய நூல்கள்

**BTh|Dip விருப்பு**

ஏற்பாடுகளுக்கு இடையிலான இலக்கிய நூல்கள் பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையேயான 400 வருடங்களே "அமைதியான வருடங்கள்" என அழைக்கப்படுகிறது. இந்த காலகட்டத்தில் அநேகமான இலக்கியங்கள் மலர்ந்தன. அந்நியர் ஆதிக்கத்தின் கீழிருந்த இஸ்ரவேலர் தாம் முகம் கொடுத்த புதிய சவால்களுக்கு தங்களின் விசுவாசத்தை பிரயோகிக்க இந்த இலக்கியங்களே துணை புரிந்தன. இந்த பாடநெறியில் அவ்வாறான முக்கிய எழுத்துக்களையும், தள்ளுபடியாகமங்கள், போலியாகமங்கள் மற்றும் சாக்கடல் சுருள்கள் ஆகியவற்றை அவற்றின் சரித்திர பின்னணியுடன் ஆராய்ந்து கற்றுக்கொள்வோம்.

13 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: ஆவணி 31

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**யொஹான் கிருஷ்ணகுமார்**

# வாரநாள் வகுப்புகள்

## கலப்பு கற்றல் நிலை

### வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்

BTh|Dip விருப்பு

எமது ஜெப வாழ்விற்கான சிறந்த முன்மாதிரி இயேசு கிறிஸ்து ஆவார். இப்பாடநெறியானது இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கையையும் வேதாகமத்திலுள்ள தேவ மனுஷர்களின் ஜெபங்களையும் குறித்து ஆராய்வதோடு, நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்? எதற்காக ஜெபிக்க வேண்டும்? மற்றவர்களை ஜெபத்தில் எவ்வாறு வழிநடத்த வேண்டும்? என்பது போன்ற பல கேள்விகளுக்கான பதிலாகவும் அமையும்.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: புரட்டாசி 2

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஞா. ஸ்டன்லி நெல்சன்**

### சங்கீதங்களை ஆராய்தல்

BTh|Dip விருப்பு

வில்லியம் கமரென் என்பவர்,“சங்கீதக்காரன் ஆத்துமாவிற்கு உயிர் வாழ்வை வழங்குகிறார்” என்கிறார். கடவுளை குறித்தும், அவரை துதிக்கவும், துக்கங்களை அவரிடம் கூறுவதற்கான வழிகளை ஆராயவும் சங்கீதக்காரன் கூறும் விளக்கங்களை அனுபவித்து மகிழ்வதோடு, சங்கீத புத்தகத்திலுள்ள பல்தரப்பட்ட சங்கீதங்களை ஒழுங்கான முறையில் விளக்கவுரையுடன் கற்றுக்கொள்வதற்கு இப்பாடநெறியானது உதவி செய்யும்.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: புரட்டாசி 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

### எஸ்றா - நெகேமியா

BTh|Dip விருப்பு

பழைய ஏற்பாட்டில் சிறையிருப்பின் காலத்துக்கு பின்னைய சரித்திரத்தை குறித்து பேசும் இரண்டு நூல்கள் இவை மட்டுமே. இவ்விருவரும் இஸ்ரவேல் சமூகத்தின் சமய சமூக அரசியல் நிலைகளை கட்டியெழுப்ப சமகாலத்தில் பணியாற்றியவர்கள். தங்களை சூழவுள்ள உலகிலிருந்து வேறு பிரிந்து மீண்டும் எவ்விதம் தங்களை சமய ரீதியில் பலப்படுத்தலாம் என்பதை இவர்கள் இஸ்ரவேலுக்கு கற்பித்தார்கள். இயேசுவின் காலத்தில் அறியப்பட்ட யூத மதத்தின் தோற்றத்துக்கான சீர்திருத்தத்தின் அடிப்படையை வித்திட்டவர்கள் இவர்களை பற்றி இப்பாடநெறியில் அறிந்துகொள்ளலாம்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: புரட்டாசி 4

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

# தவணை 3 | 31 ஆவணி – 28 கார்த்திகை 2026

# மாலைநேர வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### கலாசாரம், இனம் மற்றும் கிறிஸ்தவ அடையாளம்

BTh|Dip விருப்பு

நாம் எம்மை ஆண்பால், பெண்பால், இனம் போன்ற "அடையாள குறிப்புகள்" ஊடாக அடையாளப்படுத்துவதோடு, மற்றவர்கள் நாம் எப்படியிருக்க வேண்டும் என்று கூறும் விடயங்களினாலும், எம்முடைய கலாச்சாரத்தினாலும் வடிவமைக்கப்படுகின்றோம். இப்பாடநெறி எம்முடைய அடையாள குறிப்புக்களை ஆராய்வதாக அமையும். நாம் யார் என்பதை கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் எவ்வாறு விளங்கிக்கொள்ளக்கூடும்? கிறிஸ்துவிற்குள் இருக்கும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் என்ன? எம்மை விட வித்தியாசமானவர்களுடன் எவ்வாறு தொடர்புகளை பேண வேண்டும்? போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

13 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: ஆவணி 31

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிரஞ்ஜனி இராஜரட்ணம்**

### சீஷத்துவம்

BTh|Dip கட்டாயம்

**21-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் வழியை பின்பற்றுவது எப்படி?**

சீஷன் என்பவன் யார்? அவனுடைய குணாதிசயங்கள், அவன் எதிர்கொள்ளும் சவால்கள், ஆவிக்குரிய போராட்டங்கள், அவற்றை மேற்கொள்ளும் முறைகள் போன்ற விடயங்களை இப்பாடநெறியில் ஆராய்வதுடன், கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்வின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொரு சீஷனுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகின்ற முக்கிய காரணிகளை குறித்தும் ஆராயப்படும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: புரட்டாசி 1

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## நிகழ்நிலை கற்றல்

### 1-2 சாமுவேல்

BTh|Dip விருப்பு

இஸ்ரவேலின் சரித்திரமானது நியாயாதிபதிகளின் காலத்திலிருந்து இராஜாக்களின் காலத்துக்கு மாற்றமடைவதை குறித்து சாமுவேல் புத்தகம் கூறுகிறது. இப்பாடநெறிக்கூடாக ஏலி, சாமுவேல், சவுல், தாவீது போன்றவர்களின் வாழ்விலிருந்து பாடங்களை கற்றுக்கொள்வதோடு, புதிய கட்டமைப்பான முடியாட்சியில் தேவன் எவ்விதம் தன்னுடைய மக்களுடன் ஈடுபாடுகொள்கிறார் என்பதிலிருந்து தேவனுடைய பண்புகளை ஆழமாக புரிந்துகொள்ளவும் முடியும்.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: புரட்டாசி 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

## தவணை 3 | 31 ஆவணி – 28 கார்த்திகை 2026

# இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறிகள்

## நிகழ்நிலை கற்றல்

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுமாணி பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இறையியல் இளங்கலை பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

### சமகால கருத்தியல்கள்

**BTh கட்டாயம்**

கருத்தியல்கள் மக்கள் சிந்திக்கும் விதத்தையும், வாழ்க்கை முறையையும் வடிவமைக்கின்றன. இவ்வாறான வலுவான பிடிமானங்களை கருத்திற்கொள்ளாமல் சுவிசேஷத்தை தாக்கமுள்ள விதத்தில் அறிவிக்க முடியாது. இக்கருத்தரங்கில் இலங்கை சமூகத்தை வடிவமைத்த மார்க்ஸிசம், பின்நவீனத்துவம், இனரீதியான தேசியவாதம், ஜனரஞ்சகமான உளவியல் போன்ற முக்கிய கருத்தியல்களின் தோற்றமும் செல்வாக்கும் ஆராயப்படும்.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-9:30

ஆரம்பம்: புரட்டாசி 2

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### தலைமைத்துவ மாதிரிகள்

**BTh கட்டாயம்**

தலைமைத்துவமானது பல்வேறுபட்ட பாணிகளில் செயற்படுகின்றது என்ற உண்மையை கண்டறியுங்கள். தரிசனமுள்ள, முகாமைத்துவ, மேய்ப்பத்துவ, குழுவை கட்டியெழுப்பும், தொழிற்துறை தலைவர்கள் போன்ற பலவகைப்பட்ட தலைவர்களை நாம் காணலாம். நீங்கள் எப்படிப்பட்ட தலைவர்? ஏனைய தலைமைத்துவப் பாணிகளை கொண்ட தலைவர்கள் உங்கள் குழுவிற்கு ஏன் அவசியம்? நாம் சேவை செய்யும் மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் அவர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயலாற்ற முடியும்? போன்ற முக்கிய கேள்விகள் இப்பாடநெறியில் அலசி ஆராயப்படும்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-9:30

ஆரம்பம்: புரட்டாசி 4

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

BTh|Dip கட்டாயம்

பழைய ஏற்பாட்டை புரிந்து கொள்வது கடினமாக உள்ளதா? கவலை வேண்டாம்! இப்பாடநெறியானது பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்தினதும் ஆசிரியர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் வரலாற்று சூழ்நிலை ஆகியவற்றை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் கைகளில் தவழ்ந்த வேதாகமத்தில் உள்ளடங்கியிருந்த பல வகைப்பட்ட புத்தகங்களின் பெறுமதியை உணரவும் அனுபவிக்கவும் இப்பாடநெறியானது உதவியாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: புரட்டாசி 1

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### யோவான் எழுதிய சுவிசேஷம்

BTh|Dip விருப்பு

“ஒரு பிள்ளை நீந்தக்கூடியதும், யானை நீந்தக்கூடியதுமான ஒரு குளமே யோவானின் சுவிசேஷம்” (லியோன் மொரிஸ்). சுவிசேஷத்தை வழங்கும் இந்த தனித்துவம் மிகு முறையில், யோவான் எமக்கு வரலாற்று ரீதியான இயேசுவை குறித்தும், அவரின் போதனைகளை குறித்தும் விலைமதிப்பற்ற அறிவை தருவதை காணலாம். முக்கியமான கிறிஸ்தவ கொள்கைகளை ஆராய்கின்ற அதேவேளை, யோவான் சீஷத்துவத்திற்கான ஒரு உறுதியான அழைப்பை விடுக்கின்றார்.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: புரட்டாசி 2

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிளா சுதாகர்**

### கற்கை முறைகள்

BTh|Dip கட்டாயம்

இப்பாடநெறியானது கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், ஒப்படை மற்றும் கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும்.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: புரட்டாசி 3

திறமை அளவு: (0) 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

தவணை 3 | 31 ஆவணி – 28 கார்த்திகை 2026

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

| | |
|---|---|
| **BTh\|Dip விருப்பு** | |
| **பிரதான மதங்கள்**<br>**பௌத்தம், இந்து மதம் மற்றும் இஸ்லாம்**<br>இப்பாடநெறியானது இலங்கையிலுள்ள பிரதான மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம் மதங்களின் கோட்பாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், இலங்கை கலாச்சாரத்தில் அவர்களது தனித்துவமான பங்களிப்பு உள்ளிட்ட அனைத்தையும் அறிந்து, பன்மத சூழலில் நல்லிணக்கத்தையும் பரஸ்பர மரியாதையும் மேம்படுத்துவதற்கூடாக பிற மதம் சார்ந்த உங்கள் நண்பர்கள், அயலவர்களுக்கு பொருத்தமான விதத்தில் நற்செய்தியை பகிர்ந்து கொள்வதற்கு பெரிதும் உதவியாக அமையும். | 12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: பி.ப.5:30-8:00<br>ஆரம்பம்: புரட்டாசி 1<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**ஜுலியன் தேவதாசன்** |

| | |
|---|---|
| **BTh\|Dip விருப்பு** | |
| **திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள்**<br>திருத்தூதுப்பணி என்பது வேதாகமம் முழுவதும் பரந்து காணப்படும் ஒரு தலைப்பாகும். இவ்வுலகை குறித்த கடவுளின் நோக்கம் ஆதியாகமம் 1-ம் அதிகாரத்திலும், மீட்பை குறித்த திட்டம் 3-ம் அதிகாரத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. திருத்தூதுப் பணியின் கருப்பொருளுக்கான தேடலில் ஆபிரகாமின் அழைப்பு, இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட திருத்தூதுப் பணிக்கான ஆணை, இயேசுவும் திருத்தூதுப்பணியும், அப்போஸ்தலர் நடபடிகளில் திருத்தூதுப்பணி போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | 13 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: பி.ப.5:40-8:00<br>ஆரம்பம்: புரட்டாசி 2<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**கிறிஸ்டி சாமுவேல்** |

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**நிவேதித்தா ஜீவபாலன்,** BA (Psy)
ஆலோசனைப்பணியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த அனுபவமுள்ள விசேட மனநல நிபுணர் ஆவார். சிறுவர் மற்றும் வயது வந்தோருக்கு ஆலோசனை வழங்குவதில் சிறந்து விளங்குகிறார். ஆலோசகர்களை பயிற்றுவித்து அவர்களை மேற்பார்வை செய்துள்ளதுடன், இலங்கையில் மனநலம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பெருமளவான பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவர் வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு சுவிசேஷ கூடார சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**செல்லதுரை ஜோ. சந்ரசேகர்,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், அதன் கல்விப்பீட உறுப்பினருமாவார். கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம் என்ற பாடநெறியில் சான்றிதழை பெற்றவர். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகருமாவார். அத்துடன் தேசிய கிறிஸ்தவ ஊழியர்களின் ஐக்கியத்தின் பொதுச்செயலாளராகவும் கடமையாற்றுகிறார்.




**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் டிப்ளோமாவினை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராக பணியாற்றியுள்ளார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும் சேவையாற்றி வருகிறார்.



**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv, MTh (candidate)
**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான** இவர் தெற்காசிய இறையியல் கல்லூரி (SAIT, இலங்கை), இறையியல் கற்கைகள் மற்றும் திருத்தூதுப்பணிக்கான ஆசிய மையம் (ACTS, தென் கொரியா) ஆகியவற்றின் பட்டதாரியுமாவார். தற்போது தென்னாபிரிக்க இறையியல் கல்லூரியில் இறையியலில் முதுமாணி பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகிறார். கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (AMBASSADORS FOR CHRIST INTERNATIONAL) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராகவும், கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) பேச்சாளராகவும் திகழ்கின்றார். சிலாபம், புனித யாக்கோபின் திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**எஸ். கதிரேசப்பிள்ளை,** BD, MTh
இவர் கல்குடா சுவிசேஷ பயிற்சி நிலையத்தின் அதிபராகவும் மெதடிஸ்த சபையின் வடகிழக்கு பிரதேச தலைவராகவும், திருப்பேரவை காரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார். நீண்டகாலமாக மெதடிஸ்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**சர்மிளா சுதாகர்,** BTh, MA (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கணக்காளராக பணியாற்றுகிறார். கடந்த இரு தசாப்தங்களாக யுத்தம் மற்றும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கிறிஸ்தவ சர்வதேச உதவி அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பங்காற்றியுள்ளார். இவர் வத்தளை ஜெய ஜீவிய திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**கே. யாபேஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாகவும், அதன் போதகராகவும் பணியாற்றுவதுடன், திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin
**கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றவருமாவார். மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.


# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**குமார் சுப்ரமணியம்,** BTh, MA, MDiv, DMin (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரி, அமெரிக்காவின் கென்டாக்கி மாநிலத்திலுள்ள ஏஸ்பரி இறையியல் கல்லூரி ஆகியவற்றின் பட்டதாரியான இவர், தற்போது ஊழியத்துறையியலில் முனைவர் (DMin) பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகிறார். இவர் பல வருடங்களாக கொழும்பு இறையியல் கல்லூரியின் முழுநேர கல்விப்பீட உறுப்பினராகவும், பிரயோகப்பயிற்சி, ஆவிக்குரிய உருவாக்கத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். கறுவாத்தோட்ட பெப்டிஸ்ட் திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்ட இவர் 25 ஆண்டுகளுக்கு மேல் அத்திருச்சபையில் சிறுவர், பதின்வயதினர், வாலிபர், தம்பதியினர் மற்றும் போதக ஊழியங்களில் தலைமைத்துவ பங்களிப்பை மும்மொழிகளிலும் வழங்கி தற்போது இணை போதகராக பணியாற்றி வருகின்றார்.



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** Certificate in Counselling CWR-UK, BD
இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**குமார் ஆபிரகாம்,** MA, DMiss
இவர் பட்டப்படிப்புகளுக்கான ஆசிய இறையியல் கல்லூரி (பிலிப்பைன்ஸ்) மற்றும் அலியன்ஸ் இறையியல் கல்லூரி ஆகியவற்றின் பட்டதாரியும், அருட்பணியியல் முனைவர் (DMiss) பட்டத்தினை 'சுவிசேஷப்பணி' தொடர்பாக பெற்றவருமாவார். சுவிசேஷப்பணியாளரான இவர், இலங்கையிலும் வெளிநாடுகள் பலவற்றிலும் சுவிசேஷப்பணி செய்பவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளார். ஒவ்வொரு இலங்கை பிரஜையும் இயேசுவின் சுவிசேஷத்தை கேட்க வேண்டுமென்பதே இவரது பேரார்வமும், விருப்பமும் ஆகும். கடவுளின் கிருபையால் தனது எஜமானனுக்கு நாற்பத்தொன்பது ஆண்டுகளாக ஊழியம் செய்து வருகிறார். இவர் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ட் திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**ஜெயசீலன் ஜோயல் டிரோன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியார் பெருநிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாக துறையில் தொழில் புரிந்தவருமாவார். அநேக வருடங்களாக கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணிபுரிந்துள்ளார். தற்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவி போதகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**மோகன் இதயகுமார் அழகக்கோன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கிறிஸ்துவுக்காக இளைஞர் ஸ்தாபனத்தில் பயிற்சி நிர்வாக இயக்குனராகவும், சப்பிரகமுவா, களுத்துறை பிரிவுகளுக்கு ஊழிய பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் ஊழியம் செய்வதுடன் இளம் தலைவர்களுக்கு பயிற்சி கொடுப்பவராகவும் பணியாற்றுகிறார். இவர் வெள்ளவத்தை, மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**வனஜா ராஜ்குமார்,** BTh, MCS
***கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரான இவர், கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், இறையியலுக்கான தமிழ்மொழி செம்மையாளராகவும் பணியாற்றுகிறார்.*** பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA
Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ பாடநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொணடுள்ளார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA, MDiv
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், திருச்சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றி உள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை திருச்சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh, MSc (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பகுதி நேர கல்விப்பீட உறுப்பினரான இவர், இக்கல்லூரியின் இளமாணி பட்டதாரியுமாவார். தற்போது மருத்துவ உளவியல் முதுமாணி பட்டப்படிப்பினை கற்றுக்கொண்டிருக்கிறார். World Vision Sri Lanka நிறுவனத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், The Salvation Army Sri Lanka தலைமையகத்தில், சிறுவர் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான அறிவுரை ஆலோசகராகவும் மற்றும் Wesley College-ல் மாணவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். Child Rights Activistஆக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.




**யொஹான் கிருஷ்ணகுமார்,** BTh, MTh
நோர்ட்டன் பிரிட்ஜ் SAIT கலாசாலையில் இளங்கலை பட்டத்தையும் வேல்ஸ்ஸின் Bangor பல்கலைக்கழகத்தில் நடைமுறை இறையியலில் முதுகலை பட்டத்தையும் Global Institute of Theology (WCRC)-ல் சீர்திருத்த இறையியல் பட்டத்தையும் பெற்ற இவர் கண்டி City Mission நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளராகவும், உள்ளூர் மற்றும் வெளியூர் வேதாகம கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், தனது உள்ளூர் திருச்சபையில் இளைஞர் ஊழிய பணியாளராகவும் மூப்பராகவும் சேவையாற்றுகின்றார். கண்டி, பிரஸ்படேரியன் திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**ஞா. ஸ்டன்லி நெல்சன்,** BTh, MMin
***கொழும்பு இறையியல் கல்லூரி மன்ற உறுப்பினரும்,*** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியின் இளமாணி, முதுமாணி பட்டதாரியுமாவார். இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியின் முன்னாள் தலைவராகவும், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியுள்ளதுடன், தற்போது அத்திருச்சபையின் செயலாளராகவும், அதன் இறையியல் கல்வியகத்தின் அதிபராகவும், தெஹிவலை திருச்சபையின் போதகராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திருச்சபை ஒருமைப்பாட்டுக்கான ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராகவும் சேவையாற்றுகிறார்.



**காமினி ஜயந்த,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church இல் துணை போதகராகவும், தனது ஆராதிக்கும் சபையாகவும் கொண்டுள்ளதுடன், தற்போது Infinity Centre for Higher Studies (இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். அத்துடன் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

# CTS பாடத்திட்டங்கள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு பாடத்திட்டத்திற்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி நான்கு மட்டங்களில் பாடத்திட்டங்களை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய பாடநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21-ம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்: சிறுவர் ஊழிய களம் (CCS-CM)**
திருச்சபைக்கும் சமூகத்திற்குமான செயற்திறன் மிக்க சேவையாளர்களை பயிற்றுவிப்பதற்காகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*
*இயங்கலை மூலமாக கற்பித்தல் இடம்பெறும்*

**இறையியலில் டிப்ளோமா (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 72*

**இறையியலில் இளமாணி (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 108*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம்
011-2890809; student.services@cts.lk; www.cts.lk

**வடகொழும்பு கல்வி நிலையம்:**
0771415670; nc@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**பாடநெறிகள்:**

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  - ஒவ்வொரு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை மாலை 6.00 முதல் மாலை 9.00 வரை
- ஒவ்வொரு திறமை அளவும் 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இப்பாடத்திட்டமானது 2026, தை 5 ஆரம்பமாகவுள்ளது.

| | பாடங்கள் | திறமை அளவு |
|---|---|---|
| கட்டாய பாடங்கள் | | |
| வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் | 04 | 08 |
| சிறுவர் ஊழிய பாடங்கள் | 04 | 08 |
| விருப்புப்பாடங்கள் | 10 | 20 |
| கருத்தரங்குகள் | 04 | 00 |
| மொத்தம் | 22 | 36 |

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

**இயங்கலை:** Zoom வழியாக பாடங்கள் நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

**மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:**

திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க
ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
+94 764823127
cm@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்**

சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்**

பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

**விருப்புப்பாடங்கள்**

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.





CTS வெளியீடு

1வது தளத்திலுள்ள எமது CTS புத்தக நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்







CTS நூலகம்

41,000+
புத்தகங்களினுடைய

நூலக சேகரிப்புகளின் முகப்பு

ஆங்கிலம் | சிங்களம் | தமிழ்

இன்றே CTS நூலகத்தில் அங்கத்தவராக இணைந்துகொள்ளுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:

+ 94 112 890809 | library@cts.lk

CTS நூலகம் அனைத்து திருச்சபைகளுக்கும் திறந்துள்ளது

189 துட்டுகெமுனு வீதி, கொஹுவலை
(+94) 11 2890809 | student.services@cts.lk | www.cts.lk